**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 413 / 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW : 11** |
| **Name** | **:** | திரு. பாண்டி |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.02.2024**

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக கடந்த 30.11.2016 ம் ஆண்டு உசிலம்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். கடந்த 13.09.2016 ம் தேதியன்று உசிலம்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது, மொக்கச்சாமி மனைவி பேச்சியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த மனுவைப் பெற்று மனு எண்.265/16 கொடுக்கப்பட்டது. மேற்படி எனது பார்வைக்கு வைக்கப்பட்ட நிலைய மனு எண்.265/16 ஐப் பார்வையிட்டு 13.09.2016 ம் தேதி 11.30 மணிக்கு குற்ற எண்.239/2016 பிரிவுகள் 448,294(b), 324, 506(i) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்தேன். புகார் ஏற்கனவே

அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ. 8 ஆகும்.** புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு இரண்டாம்நிலை காவலர் திரு.தமிழ்மணி என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் ஒரு நகலை பார்வையிட்டு, 13.09.2016 ம் தேதியன்று நான் எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பேச்சியம்மாள், பார்வதி, பூங்கொடி, பெரியாண்டி, அழகர்சாமி, உமாராணி, ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே சாட்சிகள் ராஜேந்திரன், நல்லதம்பி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வை மகஜர் அதசாஆ.9 ஆகும். மாதிரி வரைபடம் அதசாஆ.10 ஆகும்.** 15.09.2016 ம் தேதியன்று சாட்சிகள் பேச்சி, அழகுத்தாய், ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின் வழக்கு கோப்பை தொடர் விசாரணைக்காக உசிலம்பட்டி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

12.09.2016 ம் தேதியன்று எத்தனை மணிக்கு புகார் பெறப்பட்டது என்றால் 14.00 மணிக்கு பெறப்பட்டுள்ளது. அன்றைய தினம் 21.00 மணிக்கு புகார் கொடுத்ததாக எனது விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் அதசாஆ.8 முதல் தகவல்

அறிக்கையை நான் தான் பதிவு செய்தேன். அதசாஆ.8 ல் கடைசியில், இரவு 09.00 மணிக்கு புகார் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு சுமார் 3 நிமிடத்தில் சென்றுவிட்லாம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும். 14.09.2016 அன்று 12.55 மணிக்கு நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 13.09.2016 ம் தேதியன்று எத்தனை மணிக்கு எனது விசாரணையைத் தொடங்கினேன் என்று நேரம் குறிப்படப்படவில்லை. நான் தயார் செய்த அதசாஆ.9 பார்வை மகஜரில் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்ற நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை செய்த சாட்சிகளை எத்தனை மணிக்கு விசாரணை செய்தேன் என்றால் 8 வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யும் முகாந்திரம் இல்லை என்றும் பின்பு எனது உயர் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் அதசாஆ.8 தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதற்கு முன்பே விசாரணை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவம் 12.09.2016 ம் தேதியன்று 02.00 மணியன்று சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தினமே 03.00 மணிக்கு புகார் கொடுத்தார் என்றும் அதில் குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் காணப்படவில்லை என்றும் யுத்திக்கும் ஆலோசனைக்கும் தகுந்தாற்போல் அதனால் பின்னிட்டு இரவு 09.00 மணிக்கு புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் மனு

கொடுக்கும்போது உமாராணி என்பவரும் உடன் இருந்தார் என்ற விபரம் எனது விசாரணையில் தெரியவந்தது. அசா1 எனது விசாரணையில் "வெட்டுவேன், குத்துவேன்" என்று எதிரி சொன்னதாக" குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாப்பாடு ஆக்கி சாப்பிடும்போது சோற்றுப்பாணையை உடைத்ததாக எனது விசாரணையில் அசா1 சொல்லவில்லை. அசா1 எனது விசாரணையில் “தண்ணீர் வரும் போர் தண்ணீர் குழாயில் இராத்திரி கல்லைப் போட்டு கெமிக்கலை போட்டுவிட்டு எங்களுக்கு தண்ணீர் வராதபடி செய்துவிட்டார்”என்று சொல்லவில்லை. அதசாஆ.1 புகாரில் உமாராணி என்பவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. உமாராணி சாட்சி கையொப்பம் போட்டு தான் புகார் கொடுக்கப்பட்டது என்றும் அது வழக்கிற்கு பாதகமாக இருந்ததால், அந்த புகார் மறைக்கப்பட்டு பின்னிட்டு வழக்கிற்கு ஏற்றாற்போல் புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசா2 பார்வதி " அசா1 புகார் கொடுக்கும்போது, என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்களா என்றால் எங்கள் மூன்றுபேரிடமும் வாங்கினார்கள்" என்று குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளவாறு எனது விசாரணையில் அசா2 சொல்லவில்லை. மூன்று பேரும் சாட்சி கையொப்பம் போட்டு தான் புகார் கொடுக்கப்பட்டது என்றும் அது வழக்கிற்கு பாதகமாக இருந்ததால், அந்த புகார் மறைக்கப்பட்டு பின்னிட்டு வழக்கிற்கு ஏற்றாற்போல் புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசா3 தனது குறுக்குவிசாரணையில் "தோட்டத்திற்கு சம்பவம் நடந்த அன்றே வந்தேனா என்றால் இல்லை" என்று சொல்லியுள்ளதை எனது விசாரணையில் சொல்லவில்லை. தோட்டம் தரிசாக கிடந்தது என்ற விபரம் எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் சரியல்ல.

முழுவதும் இல்லை. தென்னை மரம் இருந்தது. மீதி இடங்களில் விவசாயம் நடக்கவில்லை. அசா4 உமாராணிக்கும் எதிரிக்கும் இடையே சிவில் வழக்கு இருந்த விபரம் பற்றி எனது விசாரணையில் தெரியவரவில்லை. எதிரி அசா4ன் மீது சிவில் வழக்கு போட்டு இருந்தாரா என்ற விபரம் எனது விசாரணையில் தெரியவரவில்லை. அசா5,6,7,8,9 ஆகியோரை நான் வழக்கு சம்பந்தமாகவிசாரணை செய்யாமலே வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மீது உயர் அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் பொய்யாக வழக்கு பதிவு செய்து அவர்களுக்கு ஆதரவாக விசாரணை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உமாராணிக்கும் எதிரிக்கும் இடையே ஏற்கனவே சிவில் வழக்கு நடந்து கொண்டிருந்ததால், அந்த வழக்கை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்பதற்காக, பொய்யாக ஒரு புகார் கொடுக்கப்பட்டு, அதற்கு ஆதரவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சிவில் சம்பந்தப்பட்ட வழக்குகளை நாங்கள் விசாரணை செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை